5 ஆம் தரத்திற்கான

# புலமைப் பரிசில் பரீட்சை

புதிய பாடத்திட்டத்தை முற்றிலும் தழுவிய

## கடந்தகால வினா-விடைகள்

## (2001, 2002, 2003)



ஏக விநியோகஸ்தர் :

**லங்கா புத்தகசாலை**

F.L. 1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர,

கொழும்பு 12. தொலைபேசி : 2341942

வெளியீடு :

**உயர் கல்விச் சேவை நிலையம்**

12/1, புகையிரத வடக்கு வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

# பதிப்புரை

தரம் 5 புலமைப் பரீட்சையானது மாணவர்களின் திறமையை மதிப்பிடுகின்ற ஒரு பொதுப் பரீட்சையாகக் காணப்படுகின்றது. தரம் 6 இல் பாடசாலை அனுமதி பெறுவதற்கும், உதவிப்பணம் பெறுவதற்கும் மட்டுமன்றி மாணவர்களின் மதிப்பினையும் சமூகத்தில் தீர்மானிக்கின்ற ஒரு அளவுகோலாகவும் காணப்படுகின்றது. இதனால் பிள்ளைகளும் பெற்றோர்களும் இப்பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறுவதற்காக அதிதீவிர முயற்சி எடுக்கின்றார்கள்.

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் பிரகாரம் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தமிழ் மொழி, கணிதம், பாடங்களை இனங்காணல், சுற்றாடல், அழகியல், ஆங்கிலம், பாடல்கள், சிங்களம் ஆகிய தலைப்புக்களிலான விடயங்கள் கற்பதற்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ்விடயங்கள் கற்றதன் பின் பல்வேறு பயிற்சி வினாக்களில் மாணவர்கள் தேர்ச்சியடைகின்றார்கள். இதன்பின் கடந்த காலத்தில் புதிய பாடத்திட்டத்தின் பிரகாரம் நடைபெற்ற புலமைப்பரீட்சையின் பிரகாரம் விடையளிப்பு முறைகளை மாணவர்கள் விளங்கிக் கொள்வதற்கும் சரியான விடையளிப்பதற்கும் கடந்த கால புதிய பாடத்திட்ட வினாவிடைகளை உள்ளடக்கிய நூல் பெரிதும் உதவும் என எதிர்பார்க்கின்றேன். மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மத்தியில் இந்நூல் அதிக வரவேற்புப் பெறும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

பதிப்பாசிரியர்
உயர்கல்விச் சேவைநிலையம்
12/1 புகையிரத வடக்கு வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்

விலை ரூபா 85.00 (எண்பத்து ஐந்து ரூபா)
வெளிமாவட்டவிலை ரூபா 95.00 (தொண்ணூற்று ஐந்து ரூபா)

1. க.பொ.த. சாதாரண தரத்திற்குரிய கடந்த கால வினாவிடைகள் (புதியபாடத்திட்டம்)

- கணிதம் I. II
- விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் I. II
- சமூகக்கல்வியும் வரலாறும் I, II
- தமிழ்மொழியும் இலக்கியமும்
- சைவசமயம் I, II
- ஆங்கிலம்
- கிறிஸ்தவ சமயம்
- வணிகக்கல்வியும் கணக்கீடும் I, II
- சித்திரக்கலை I. II. III
- நடனக்கலை
- புவியியல்
- அபிவிருத்திக்கல்வி

விலை ரூபா 70.00 (எழுபது ரூபா)
வெளிமாவட்ட விலை ரூபா 80.00 (எண்பது ரூபா)

* புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய (ஆண்டு 5) வழிகாட்டி — திருமதி - இராஜேஸ்வரி ரகுநாதன், திருமதி - இ.ரெஜிபிரான்சிஸ்கு, திருச்சி - நவரட்ணம் (அதிபர்)

- வர்த்தகமும் கணக்கியலும் தரம் 10
- வர்த்தகமும் கணக்கியலும் தரம் 11
- வணிகக்கல்வி A/L பகுதி I (1)
- வணிகக்கல்வி A/L பகுதி I (2)
- வணிகக்கல்வி A/L பகுதி I (3)
- வணிகக்கல்வி A/L பகுதி I (4)

புதிய பாடதிட்டத்திற்குரியது
இ . ரட்ணம்
சிரேஷ்ர விரிவுரையாளர்
முகாமைக் கற்கைகள் வணிகபீடம்
யாழ்/ பல்கலைக்கழகம்.

- கணக்காய்வும் நுண்ணாய்வு
- சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்

பட்டப்படிப்புக்குரியது
இ . ரட்ணம்
யாழ் பல்கலைக்கழகம்

- உற்பத்தி முகாமைத்துவம்
- முகாமைத்துவம்

திரு. க. தேவராஜா
தலைவர் வணிகத்துறை,
யாழ்ப்பாப்பல்கலைக்கழகம்

| | |
|---|---|
| ❧ பொது நிதி முகாமைத்துவம் | ஜே. கில்பேட்குணம் (கணக்காளர்) |
| ❧ கிரயக் கணக்கியல் I<br>❧ கிரயக் கணக்கியல் II<br>❧ தீர்மானக் கணக்கீடு | திருமதி ரதிராணி யோகேந்திரராஜா<br>சிரேஷ்ர விரிவுரையாளர்<br>யாழ்பல்கலைக்கழகம் |
| ❧ பொருளியல் | திரு. வே.. கருணாகரன்<br>ஆசிரியர் கனகரட்ணம் மகாவித்தியாலயம் |
| ❧ அரசியல் சமூகவியல் | கலாநிதி- சுதுவை-கா.ச.நாதன் |
| ❧ இலங்கையின் பொருளாதாரம் வரலாறு | கலாநிதி. வி. நித்தியானந்தம் |
| ❧ [illegible] G.C.E A/L க்கு உரியது | P. கமல்நாதன்,<br>P. உமாசங்கர் |
| ❧ [illegible] | கலாநிதி ஏ. எஸ், ஆனந்தன்,<br>யாழ்ப்பல்கலைக்கழகம் |
| ❧ [illegible] தரம் 1<br>❧ தமிழ் 4, கணிதம் 4 தரம் 4 | செல்வி. இர்ாசதுரை |
| ❧ கர்நாடக சங்கீதம் G.C.E (O/L)<br>❧ கர்நாடக சங்கீதம் 10ம் ஆண்டு | செல்வி. கிருஷ்ணவேணி |
| ❧ நடனக்கலை தரம் 6 - 11 | செல்வி சு. அகல்யா<br>SPec.. Dip.in. Ed. |
| ❧ அரங்கு ஓர் அறிமுகம் | பேராசிரியர், கா. சிவத்தம்பி,<br>பேராசிரியர், சி. மௌனகுரு<br>திரு. க. திலகநாதன் |
| ❧ மனிதவள முகாமைத்துவம் | தனேஸ்வரி ரவீந்திரன்<br>(BBA (Hons) M. Phil. |
| ❧ முகாமைத்துவத்திற்கான தகவல் தொழில்நுட்பம் | வே. ஈஸ்வரன் |
| ❧ பொருளியல் - 2 | S.சந்திரசேகரம்<br>B.A Hons, (Ecom) University of Jaffna,<br>M.A. (Ecom) University of Colombo,<br>Sri Lanka. |

## G.C.E (A/L) கடந்த காலவினாவிடைகள் (1987 - 2004)

| | |
|---|---|
| ❧ கலைத்துறை<br>❧ வர்த்தகத்துறை<br>❧ கணிதப்பிரிவு<br>❧ விஞ்ஞானப் பிரிவு | வெளிவரவுள்ளது. |

# தரம் ஐந்து மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சை 2003 டிசெம்பர்

# வினாத்தாள் I

45 நிமிடங்கள்

❖ 1ஆம் 2 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உருக்களிடையே மிக நெருங்கிய தொடர்பை உடைய இரண்டு உருக்களைக் குறிக்கும் எழுத்துகள் உள்ள விடையின் கீழே கோடு இடுக.

(1)




(1) A உம் C உம் (2) B உம் D உம் (3) E உம் F உம்

(2)




(1) A உம் C உம் (2) B உம் D உம் (3) E உம் F உம்

❖ 3 ஆம் 4 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உருக்களிடையே ஒத்த இரண்டு உருக்களைக் குறிக்கும் எழுத்துக்கள் உள்ள விடையின் கீழே கோடு இடுக.

(3).




(1) A உம் C உம் (2) B உம் D உம் (3)A உம் D உம்

(4)




(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) C உம் D உம்.

❖ *5 ஆம் 6 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள கூடுகளில் குறித்து காட்ட மேலிருந்து கீழாகவும் மூன்று எழுத்துக்கள் கொண்ட மூன்று சொற்கள் உருவாகும் வினாவில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடு இடுக.*

5.

| | | |
|---|---|---|
| அ | | து |
| சோ | | ம |
| கு | | பி |

(1) மு / ட / ம் (2) மு / க / ம் (3) மு / க / வை

6.

| | | |
|---|---|---|
| உ | ம | து |
| | | |
| வ | ம் | பு |

(1) தவம் (2) தகுதி (3) தரம்

7. 7ஆம் 8ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களை வாக்கியங்களில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைக் குறிக்கும் விடையின் கீழே கோடு இடுக.
(1) அடைமொழியாக (2) பெயர்ச்சொல்லாக (3) வினைச் சொல்லாக

8. பாடுக, ஓடியது, சிரித்தான்.
(1) அடைமொழியாக (2) பெயர்ச்சொல்லாக (3) வினைச் சொல்லாக

❖ 9ஆம் 10ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்களில் மிகச் சரியாக கருத்துள்ள வாக்கியத்தின் கீழே கோடு இடுக.

9. (1) கீழ்ப்படிவுள்ள பெரியோர் கூறும் அறிவுரைகளை நல்ல பிள்ளைகள் பின்பற்றுவர்.
(2) கீழ்ப்படிவுள்ள பிள்ளைகள் பெரியோர் கூறும் நல்ல அறிவுரைகளைப் பின்பற்றுவர்
(3) நல்ல பிள்ளைகள் பெரியோர் கூறும் கீழ்ப்படிவான அறிவுரைகளைப் பின்பற்றுவர்.

10. (1) பசியோடு காட்டின் உள்ளே சென்ற நரி கள்ளங்கபடமற்ற முயலைத் துரத்திச் சென்றது.
(2) கள்ளங்கபடமற்ற நரியைப் பசியோடு காட்டின் உள்ளே சென்ற முயல் துரத்திச் சென்றது.
(3) பசியோடு காட்டின் உள்ளே சென்ற கள்ளங்கபடமற்ற முயல் நரியைத் துரத்திச் சென்றது.

❖ 11 ஆம் 12 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழே கோடு இடுக.

11. அருண் பாடசாலைக்கு அருகில் வசித்து வந்தான். என்னும் அவன் பல நாட்களாகப் பாடசாலைக்குச் சமுகமளிக்கவில்லை. அவன் பாடசாலைக்குச் சமுகமளிக்காததற்கு காரணமாக இருக்ககூடியது எது?
(1) அது பாடசாலை விடுமுறைக் காலமாக இருந்தமை.
(2) அருண் சுகவீனமுற்றிருந்தமை.
(3) பாடசாலை பஸ் வராதிருந்தமை.

12. தீபன் முயற்சியோடு பாடங்களைப் படிக்கும் பிள்ளையானபோதிலும் கடந்த புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையவில்லை. அவன் பரீட்சையில் சித்தியடையாமைக்குக் காரணமாக இருக்கக்கூடியது எது?
(1) தீபன் மீது ஏனைய மாணவர்கள் பொறாமை கொண்டிருந்தமை.
(2) பரீட்சையின்போது தீபனால் சரியான விடைகளை எழுதமுடியாமல் இருந்தமை.
(3) தீபன் நினைத்தைவிட வினாத்தாள் இலகுவாக இருந்தமை.

❖ 13 ஆம் 14 ஆம் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை C குறிப்பிடும் திசை வழியே பார்க்கும்போது அது தோன்றும் விதத்தைக் காட்டும் விடையின் கீழே கோடு இடுக.




(1) 

(2) 

(3) 




(1) 

(2) 

(3) 

❖ 15 ஆம் 16 ஆம் வினாக்களில் ஐந்து நிகழ்வுகள் குறிக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வு தொடர்கள் குறிப்பிட்ட சந்தர்ப்பம் ஒன்றைக் காட்டுகின்றன. இவை சரியான ஒழுங்குவரிசையில் காணப்படவில்லை. இந்த நிகழ்வுகளை ஒழுங்கு வரிசைப்படுத்தும்போது மூன்றாம் இடத்தில் வரும் நிகழ்வைக் குறிக்கும் விடையின் கீழ் கோடு இடுக.

15. ஒரு சிறுபிள்ளை கள்ளங்கபடமற்ற மனிதன் ஒருவனுக்கு உதவி செய்கின்றது.

A - வீதி ஓரத்தில் முதியவர் ஒருவர் இருப்பதைக் காணுகின்றான்.

B - நேசன் மதிய உணவுக்கான தனது சோற்றுப் பார்சலை அவருக்குக் கொடுக்கின்றான்.

C - நேசன் பாடசாலை செல்லப் புறப்பகின்றான்.

D - முதியவர் உணவு கேட்கின்றார்.

E - முதியவர் அவனுக்கு ஆசீர்வாதம் செய்கின்றார்.

(1) B (2) C (3) D

16. பெற்றோரின் பாதங்களை வணங்கிய பின்னர் ஒரு சிறுபிள்ளை பாடசாலை செல்லப் புறப்படுகின்றது.

A - ஆடை அணிகள் அணிகின்றான்

B - அதிகாலையில் எழுகின்றான்.

C - புத்தகங்களைத் தயார்ப்படுத்துகின்றான்.

D - பெற்றோரின் பாதங்களை வணங்குகின்றான்.

E - முகம் கழுவுகின்றான்.

(1) A (2) B (3) D

❖ 17 ஆம் 18 ஆம் வினாக்களில் உள்ள சொல் வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம்பெறும் சொல் வரிசையின் கீழே கோடு இடுக.

17. (1) இசைக்கருவி, கோவா, கரஞ், லீக்ஸ்.

(2) சிவப்பு, மஞ்சள், நிறம், நீலம்.

(3) மேசை, கதிரை, கட்டில், அலுமாரி.

18. (1) இசைக்கருவி, புல்லாங்குழல், தபேலா, ஹார்மோனியம்.

(2) சுறா, அறக்குளா, சூரை, நெய்த்தோலி.

(3) கிறிக்கெற், காற்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், ஹொக்கி.

❖ 19 தொடக்கம் 32 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையின் கீழே கோடு இடுக.

19. ரமணியின் வயது ரூபிணியின் வயதின் அரைவாசியாகும். ரூபிணியின் வயது தர்சனியின் வயதின் அரைவாசியாகும் மூவரினதும் வயதினதும் மொத்தம் 35 ஆண்டுகள் என தர்சினிக்கு எத்தனை வயது?

(1) 15 (2) 19 (3) 20

20 ஒரு வாங்கில் பெண் பிள்ளைகள் வரிசையாக அமர்திருந்தனர். ஒரு பக்கத்தில் இரு கணக்கிடும்போது ரூபி 13 ஆவதாக அமர்திருந்தாள் மறுபக்கத்திலிருந்து கணக்கிடும்போது அவள் 6 ஆவதாக அமர்திருந்தாள். வாங்கில் எத்தனை பெண் பிள்ளைகள் அமர்ந்திருந்தனர்.

(1) 18 (2) 19 (3) 21

21. எனது சட்டைப் பையில் மூன்று வகையான 9 நாணயங்கள் இருக்கின்றன. அவற்றின் மொத்தம் ரூபா 24 ஆகும். எனது பையில் இருக்கும் நாணயங்கள் யாவை?

(1) ரூபா 5 நாணயங்கள் 2, ரூபா 2 நாணயங்கள் 4, ஒரு ரூபா நாணயங்கள் 3

(2) ரூபா 5 நாணயங்கள் 3, ரூபா 2 நாணயங்கள் 2, ஒரு ரூபா நாணயங்கள் 4

(3) ரூபா 5 நாணயங்கள் 3, ரூபா 2 நாணயங்கள் 3, ஒரு ரூபா நாணயங்கள் 3

22. பெப்ருவரி மாதத்தில் 29 நாள்களை உடையது நெட்டாண்டாகும். ஒவ்வொரு 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நெட்டாண்டு வரும். 1996 ஆம் ஆண்டு அந்நெட்டாண்டானால் 29 நாள்கள் கொண்ட பெப்ருவரி மாதங்கள் பின்வரும் எந்த ஆண்டுகளில் வரும்?

(1) 2006 உம் 2010 உம் (2) 2008 உம் 2012 உம் (3) 2010 உம் 2015 உம்

23. இரண்டு மோட்டார் வண்டிகள் ஓர் இடத்திலிருந்து புறப்பட்டுப் பின்னர் அவை ஒவ்வொன்றும் எதிர்ச் திசைகளில் 100 மீற்றர் தூரம் செல்கின்றன. பின்னர் ஒரு வண்டி வலப் பக்கமும் மற்றைய வண்டி இடப் பக்கமும் திரும்பி ஒவ்வொன்றும் 200 மீற்றர் தூரம் செல்கின்றன. இப்போது இரண்டு வண்டிகளுக்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு.

(1) 600 மீற்றர் (2) 300 மீற்றர் (3) 200 மீற்றர்.

24. உருவில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு பிள்ளை சதுர வடிவில் ஒரு பூம்பாத்தியைத் தயாரித்து அதனைச் சுற்றி ஒரு வேலியை அமைத்தது. அம்புக்குறியினால் காட்டப்படும் பாதாயினும் ஒரு திசை வழியே பார்க்கும்போது அப்பக்கத்தில் 10 கம்பங்கள் காணப்படுமெனில் இவ்வேலிக்குப் பயன்படுத்தப்பட்ட கம்பங்களின் எண்ணிக்கை யாது?



(1) 36 (2) 40 (3) 44

25. பட்டது என்னும் சொல்  எனவும்.

முப்பது என்னும் சொல்  எனவும் உருக்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளன.

கருத்து என்னும் சொல்லைச் சரியாக எழுதக்கூடிய விதத்தைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

26. குருதி = 234 எனில் திருகு = ............ ஆகும். வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(1) 243 (2) 324 (3) 432

27. கமலியின் தாய் பிரியா. தகப்பன் திலகர் பாலன் கமலியின் சகோதரன், கமலியின் மகள் குகன், பிருந்தனும் சியாமிளாவும் பாலனின் இரு பிள்ளைகள். இக்கூற்றுகளின்படி பின்வரும் வரிப் படத்தில் (1) ஆம் (2) ஆம் இடங்களில் உள்ள கூடுகளுக்குப் பொருத்தமான பெயர்கள் எவை?




(1) பிருந்தன், சியாமளா (2) குகன், பிருந்தன் (3) கமலி, பிருந்தன்.

28. பின்வரும் உருவில் உள்ள அட்டைத்தாள் துண்டைப் பாருங்கள்

இம்முறிகோட்டின் வழியே ஆங்கில டபிள்யூ எழுத்து வடிவில் முடித்தால் பெறப்படும் உரு எது?



(1) (2) (3)

29. உரு A இலுள்ள தராசினைப் பாருங்கள் அதின் இரு பக்கங்களிலும் வைக்கப்பட்டுள்ள நிலைகள் சமனானவையாகும்.







இதற்கேற்ப உரு B இலுள்ள தராசின் இரு பக்கங்களிலும் உள்ள நிறையைச் சமன் செய்வதற்கு நிறை குறைந்த பக்கத்துக்குச் சேர்க்கப்பட வேண்டியதைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

30. உருவில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.



(1) 

(2) 

(3) 

❖ கீழே தரப்பட்டுள்ள தொடர்புகளுக்கு இலக்கங்களுக்குப் பதிலாகக் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எல்லா உருக்களுக்கும் 10 இற்குக் குறைவான எண் பெறுமானம் உண்டு. அந்த எண் பெறுமானத்தை அறிந்து 31 ஆம் 32 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.



31 கீழே உள்ள உருக்களை அவற்றின் பெறுமானத்திற்கேற்ப நிரைப்படுத்தினால் சரியான வழி யாது?



32. சரியான தொடர்பினைக் காட்டும் விடையின் கீழே கோடு இடுக.



❖ 33 ஆம் 34 ஆம் வினாக்கள் பின்வரும் கூடுகளில் உள்ள இலக்கங்களையும் எழுத்துக்களையும் அடிப்படையாய்க் கொண்டவை.

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 8 | ச | 4 | 5 |
| 4 | 3 | 1 | ல | 6 |
| 6 | 4 | 2 | 3 | ம |
| 2 | 8 | 4 | 5 | 1 |
| 5 | 6 | க | 4 | 3 |

33. இக்கூடுகளில் உள்ள இலக்கம் 4 களின் எண்ணிக்கை, இலக்கம் 5 களின் எண்ணிக்கையை விடக் கூடியதெனில் எழுத்தில் உள்ள கூட்டில் x வரைக. அவ்வாறு இல்லையெனில் எழுத்து ச உள்ள கூட்டில் x ஐ வரைக.

34. இக்கூடுகளில் உள்ள இலக்கம் 3 இன் கூட்டுத்தெகை இலக்கம் 2 இன் கூட்டுத்தொகையை விடக் கூடியதெனில் எழுத்து ம உள்ள கூட்டில் X ஐ வரைக. அவ்வாறு இல்லையெனில் எழுதுக க உள்ள கூட்டில் X ஐ வரைக.

v பின்வரும் ஒவ்வொரு புதிரிலும் மறைந்துள்ள சொல்லைக் கண்டுபிடித்து அதனைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

35. இது மூன்று எழுத்தக்களைக் கொண்ட சொல்லாகும்.
முதலெழுத்து பலத்தில் உண்டு குலத்தில் இல்லை.
இரண்டாம் எழுத்து மணத்தில் உண்டு மனத்தில் இல்லை.
மூன்றாம் எழுத்து கொம்பில் உண்டு கொப்பில் இல்லை. ........................................................................

36. இது மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொல்லாகும்.
முதலெழுத்து அவலில் உண்டு அயலில் இல்லை.
இரண்டாம் எழுத்து கரத்தில் உண்டு களத்தில் இல்லை.
மூன்றாம் எழுத்து கும்மியில் உண்டு குடுமியில் இல்லை. ........................................................................

37 ஆம் 38 ஆம் வினாக்களின் ஒவ்வொரு கூட்டிலும் இலக்கங்கள் இடப்பட்டுள்ள கோலத்தை விளங்கிக்கொண்டு வெற்றுக் கூட்டுக்குப் பொருத்தமான இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

37.

| | | |
|---|---|---|
| 8 | 10 | 12 |
| 6 | 4 | 14 |
| | 18 | 16 |

......................

38.

| | | |
|---|---|---|
| 19 | 22 | 25 |
| 16 | 13 | 15 |
| | 4 | 7 |

......................

38. குறிப்பிட்ட ஒரு மாகாணத்தில் 5 ஆம் தரத்தில் கற்கும் மாணவர்கள் தொடர்பாகச் செய்யப்பட்ட ஆய்வின்போது தவணைப் பரீட்சை ஒன்றில் ஒவ்வொரு பாடசாலையிலும் 1, 2, 3, 4, 5 ஆம் இடங்கள் பெறப்பட்டுள்ள விதம் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

64 பாடசாலைகளில் இந்த ஐந்து இடங்களும் பெறப்பட்டுள்ள விதம் பின்வருமாறு :
ஆண் - பெண் - பெண் - ஆண் - பெண்

37 பாடசாலைகளில் இந்த ஐந்து இடங்களும் பெறப்பட்டுள்ள விதம் பின்வருமாறு :
பெண் - ஆண் - ஆண் - பெண் - பெண்.

v இத்தகவல்களைப் பயன்படுத்தி 39 ஆம் 40 ஆம் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

39. இந்த 101 பாடசாலைகளிலும் தவணைப் பரீட்சையில் முதல் ஐந்து இடங்களையும் பெற்ற மாணவர்களில் ஆண் பிள்ளைகள் எத்தனை பேர்?..................................................

40. இந்த 101 பாடசாலைகளிலும் தவணைப் பரீட்சையில் முதல் ஐந்து இடங்களையும் பெற்ற மாணவர்களில் இரண்டாம் இடத்தையும் ஐந்தாம் இடத்தையும் பெற்ற பெண் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு? ....................................................................

****

# தரம் ஐந்து மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சை 2003 டிசெம்பர்

# வினாத்தாள் II

1.45 நிமிடங்கள

01. பின்வரும் விவரணத்தை வாசித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

மழைகாலத்தழல் வனங்கள் தண்மை மிக்கனவாகக் காட்சியளிக்கும். அக்காலத்தில் மரங்கள் எல்லாம் பச்சைக் கம்பளம் போர்த்ததுபோலக் காணப்படும். திறந்த வெளிகளில் புற்கள் உயர்ந்து வளர்ந்திருக்கும். குழிகளில் எல்லம் நீர் நிறைந்திருக்கும். நதிகளிலோ குளங்களிலோ மிருகங்கள் தண்ணீர் குடிக்கப் பதுங்கிச் செல்லும் நிலயை நாம் காணமுடியாது. நன்றாக விளைந்த கிழங்குகள், வேர்கள், அலைகள் என்பவற்றைச் சுவைத்து உண்டு பருத்து பன்றிகளோடு, மான்களும் அங்குமிங்கும் அலைந்து திரிகின்றன. களிறுக் கூட்டம் நதிக்கரைகளில் நின்று ஆரவாரம் செய்யாது காட்டினுள்ளே ஆடி அசைந்து செல்வதையும் காணலாம்.

(i) வனங்கள் என்பதன் ஒத்த கருத்துச் சொல் ஒன்று தருக. (.....................................................)

(ii) பருத்து என்பதன் எதிர்க் கருத்துச் சொல் ஒன்று தருக. (...............................................)

(iii) களிறு என்பதற்குரிய பெண்பாற் சொல்லை எழுதுக. (...............................................)

(iv) அ்.றிணை பன்மை நிகழ்கால வினைச்சொல் ஒன்று எழுதுக. (...............................................)

(v) இங்கு இடம்பெற்றுள்ள இணைமொழி ஒன்று எழுதுக. (...............................................)

(vi) தன்மைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக. (...............................................)

(vii) ஆடி அசைந்து என்பதாற் கருதப்படுவது யாது? (...............................................)

(viii) நதிகளிலோ குளங்களிலோ விலங்குகளுக்கு நீர் குடிக்க வேண்டிய தேவை ஏன் ஏற்படுவதிலிலை? (...............................................)

(ix) ஆரவாரம் என்பதாற் கருதப்படுவது யாது? (...............................................)

(x) வெற்றிடத்திற்கு மிகப் பொருத்தமான விடையை எழுதுக.

"மழைகாலத்தில் வனங்கள் தண்மை மிக்கனவாக இருந்தால் வரட்சி காலத்தில் வனங்கள் ................................ ................................................ மிக்கனவாக இருக்கும்."

02. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) வரும் / நீரை / குளத்து / குடிப்பதற்கு / விலங்குகள்.

.....................................................................................................

(ii) பூக்களால் / மாலை / காலை / தொடுத்தனர் / மலர்ந்த.

.....................................................................................................

03. பின்வரும் தொடர்களின் உட்கருத்தினை எழுதுக.

(i) நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த ..................................................

(ii) கண்ணும்கருத்துமாக வளர்த்தல் ..................................................

04. பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துகளில்) எழுதுக.

(i) மழை : ..................................................

(ii) பச்சை நிறம் : ..................................................

(iii) நதி : ..................................................

(iv) வைத்தியர் : ..................................................

05. பின்வரும் ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லினதும் கருத்தை எழுதுக.

(i) Animals ..................................................

(ii) Festivals ..................................................

(iii) Rabbit ..................................................

(iv) Ballon ..................................................

06. சரியான விடையின் கீழே கோடு இடுக.

(i) பின்வருவனவற்றுள் இரவு நேரத்தில் இலைகள் சுருங்கும் தாவரம் எது?

(1) முருங்கை (2) தாமரை (3) கறிவேப்பிலை (4) அகத்தி

(ii) பின்வருவனவற்றுள் உணவு உண்ணல் தொடர்பான நற்பழக்கங்களுள் அடங்காத விடயம் எது?

(1) போதுமான அளவு உணவை மட்டும் பகிர்ந்து கொள்ளுதல்.
(2) உணவில் அகற்ற வேண்டிய பகுதியை நிலத்தில் சிந்தாமல் ஒரு புறம் வைத்தல்.
(3) வாயிலிருந்து சத்தம் எழாதவாறு உணவை உண்ணுதல்.
(4) தேசிய உணவுகளை மட்டும் உண்ணுதல்.

(iii) பின்வரும் பிராணிகளுள் ஊர்வன அல்லாதது.

(1) மஞ்சள் (2) கபிலம் (3) வெள்ளை (4) நீலம்.

(iv) தையலை அலங்காரத்துக்காகப் பயன்படுத்தும் முறைகளில் ஒரு தையல் முறை கீழே காணப்படுகின்றது. இத்தையலின் பெயர் யாது?

(1) சங்கிலித் தையல்
(2) கம்பளித் தையல்.
(3) மீன்முள்ளுத் தையல்.
(4) வெட்டுக்குத்துத் தையல்.



(vi) பின்வருவனவற்றுள் அயடீன் குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?

(!) தொண்டைக்கரப்பான் (2) நீரிழிவு (3) கண்டமாலை
(4) யானைக்கால்

(vii) பின்வரும் விடைகளுள் தேசப்படங்களில் பெருந்தெருக்களைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நியம நிறம் எது?

(1) கறுப்பு (2) நீலம் (3) பச்சை (4) சிவப்பு

(viii) நுகர்வுக்கான வர்த்தகப் பொருள்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் இலங்கையின் இலச்சினை எது?

(1) SLS (2) SOS (3) ISO (4) ISBN

(ix) தொல்பொருட்கள் பெறுமதிமிக்கதாகவும் கலைத்துவப் பெறுமதிமிக்கதாகவும் உள்ள இடம்.

(1) எம்பிலிப்பிட்டிய (2) சீகிரியா (3) பானம (4) கொத்மலை.

(x) மழையுடன் மின்னலும் ஏற்படும் வேளையில் பாதுகாப்புக்காக நாம் பின்பற்ற வேண்டிய சரியான நடவடிக்கை யாது?

(1) வீட்டினுள்ளேயே இருத்தல்.
(2) வீட்டினுள்ளேயும் பாதணிகளை அணிந்திருத்தல்.
(3) நிலத்துடனான தொடர்பைத் தவிர்த்தல்.
(4) உலோக வகைகளைத் தொடுவதைத் தவிர்த்தல்.

07. ஒவ்வொரு உருவிலும் காணப்படும் மூலிகைத் தாவரத்தின் பெயரை அடைப்புக்குள் உள்ள பெயர்களில் இருந்து தெரிவு செய்து எழுதுக.




குன்றிமணி, சதைரைசச்சான், ஊமத்தை, ஆடாதோடை, கற்றாளை, நொச்சி, ஆமணக்கு, கண்டங்கத்தரி, பொன்னாவரசு, குப்பைமேனி.

08. உலர் மின்கலத்தைப் பயன்படுத்தி இரு மின்குமிழ்களை ஒரே தடவையில் ஒளிரச் செய்வதற்கு மூன்று கம்பித் துண்டுகள் தொடுக்கப்படும் விதத்தைப் பின்வரும் வரிப்படத்தில் வரைந்து காட்டுக.




09. பின்வரும் உபகரணங்கள் எக்கைத்தொழில்களில் பயன்படுத்தப்படுகின்றன?

(i) வனைசில்லு :..........................................................

(ii) பரம்புப் பலகை :..........................................................

(iii) பட்டடை :..........................................................

(iv) மணியாசு :..........................................................

10. பின்வரும் பாடலிலுள்ள வெற்றிடங்களில் 'இடப் பக்கம்', 'வலப் பக்கம்' என்னம் சொற்களைப் பொருத்தமான இடங்களில் எழுதுக.

வீதி தன்னைக் கடக்கவே நான் காத்திருந்தேன் ஓரமாய்
வாகனங்கள் எதுவும் வரா வேளையினைப் பார்த்திருந்து
.............................. பார்த்து அடுத்து ..............................பார்த்து
மீண்டும் ..............................பார்த்துக் கடந்திடுவேன் வீதியை.

11. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடு இடுக.

(i) விகடகவி எனப்படுவோன்.
   (1) அரச சபைக் கவிஞராக இருப்பவன்.
   (2) இயற்கையாகவே கவி இயற்ற வல்லவன்.
   (3) நகைச்சுவையாகப் பேசவும் பாடவும் வல்லவன்.
   (4) கோமாளியாக வேடந்தாங்கி நடிப்பவன்.

(ii) இலங்கை அரசு இலச்சினையில் காணப்படுவன.
   (1) தருமசக்கரம், சூரிய சந்திரர், நீல அல்லி, நிறைக்கலசம், கலரிதழ், நெற்கதிர்.
   (2) சூரிய சந்திரர், காட்டுக் கோழி, நாகமரம், நெற்கதிர், மலரிதழ், தருமச்சக்கரம்.
   (3) தருமச்சக்கரம், சிங்கம், நெற்கதிர், மலரிதழ், நிறைகலசம், சூரிய சந்திரர்.
   (4) நிறைக்கலசம், சூரிய கந்திரர், நாகமரம், சிங்கம், தேசியக்கொடி, நெற்கதிர்.

(iii) பித்தளைத் தகட்டிற்கு அருகில் காந்தத் துண்டினைக் கொண்டு செல்லும்போது.
   (!) பித்தளைத் தகட்டை நோக்கிக் காந்தத் துண்டு இழுக்கப்படும்.
   (2) பித்தளைத் தகட்டிலிருந்து காந்தத் துண்டு தள்ளப்படும்.
   (3) பித்தளைத் தகட்டுக்கும் காந்தத் துண்டுக்கும் இடையில் மாற்றம் எதுவும் ஏற்படமாட்டாது.
   (4) ஒரு முனை கவரப்படும் அதே வேளை அடுத்த முனை தள்ளப்படும்.

(iv) இரவில் வானத்தை அவதானிக்கும்போது பல உடுக் கோலங்களைக் காணலாம் கீழே காணப்படும் உடுக் கோலங்களுள் கலப்பை உடுத் தொகுதி எது?


(1)


(2)


(3)


(4)

12. தரப்பட்டுள்ள உருக்களுக்கு உரிய பெயர்களைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.





(1).............................................................. (2) ..................................................................

13. ஒவ்வொரு உருவிலும் காணப்படும் கொண்ணிலைக்குரிய கட்டளையை அடைப்புக்குள் தரப்பட்டுள்ள கட்டளைகளிலிருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.





(1).............................................................. (2)..................................................................

குறிப்பிற்குச் செல், செல்க, கவனமாய் நில், ஒன்று இரண்டு மூன்று, ஆயத்தம் செய், இலகுவாய் நில்.

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

14. நான்கு ஆரம்பப் பாடசாலைகளின் மாணவர் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் காணப்படுகின்றது.

| பாடசாலை | மாணவர் எண்ணிக்கை | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| விஜய வித்தியாலயம் | 106 | 95 |
| அந்தோனியார் வித்தியாலயம் | 104 | 85 |
| சாகிரா வித்தியாலயம் | 108 | 105 |
| நாவலர் வித்தியாலயம் | 126 | 120 |

(i) விஜய வித்தியாலய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? (............)

(ii) அந்தோனியார் விததியாலயத்தின் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள வித்தியாசம் யாது? (................)

(iii) சாகிரா வித்தயாலயத்தின் எல்லா ஆண் பிள்ளைகளும் நான்கு இல்லங்களுக்குச் சமனாகப் பங்கிடப்பட்டால், ஒரே இல்லத்திற்குரிய ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது? (.................)

(iv) நாவலர் வித்தியாலயத்தின் ஒவ்வொரு பிள்ளைக்கும் 5 பென்சில்கள் இலவசமாக வழங்கப்பட்டன. ஆண் பிள்ளைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பென்சில்களின் எண்ணிக்கை யாது? (...............)

(v) நான்கு பாடசாலைகளிலுமுள்ள பெண் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது? (....................)

(vi) நான்கு பாடசாலைகளினதும் பெண் பிள்ளைகளைக் காட்டும் நிரல் வரைபைப் பின்வரும் உருவில் உரிய நிரல்களை நிழற்றுவதன் மூலம் காட்டுக.




v பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

15. பின்வரும் உருவில் உள்ள ஒவ்வொரு சதுரத்தினதும் நீளமும் அகலமும் முறையே 1 cm எனக் கருதுக. அவ்வாறெனில்

(i) நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவைக் காண்க. (.................)

(ii) அப்பரப்பளவை முழு உருவினதும் தசம எண்ணாக எழுதுக. (...............)



16. 


இவ்வுருவின் சுற்றளவைத் தரப்பட்டுள்ள அளவீடுகளுக்கேற்பக் காண்க. (.....................)

17. காட்டப்பட்டுள்ள உருவில் எத்தனை நாற்பக்கங்களை இனங்காணலாம்?



18. மு.ப 1.30 இற்குப் பொழும்பு விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட ஆகாயவிமானம் ஒன்று இன்றைய தினமே பாங்கொக் நேரம் மு.ப 6.00 மணிக்கு பாங்கொக் விமான நிலையத்தில் வந்திறங்கியது. கொழும்பு நேரம் மு.ப 6.00 மணியாகும்போது பாங்கொக் நேரம் மு.ப 7.00 மணியாகும் விமானப் பயணத்திற்கு எடுத்த நேரம் எவ்வளவு? (......................)

19. ஒரு நோயாளிக்கு ஒரே தடவைக்கு 2 வீதம் ஒரு நாளைக்கு 3 தடவைகள் எடுப்பதற்கு 30 மாத்திரைகள் வழங்கப்பட்டன. இம்மாத்திரைகள் எத்தனை நாட்களுக்குப் போதுமானவை? (......................)

20. பெருக்கல் '*' குறியீட்டினாலும் வகுத்தல் '/' குறியீட்டினாலும் காட்டப்படுமெனில், 9* 4/2 இன் பெறுமானம் யாது? (.................)

21. ரூபா 62 பெறுமானமுள்ள பொருள்களை வாங்கிய அகிலன் வியாபாரியிடம் ரூபா 100 தாள் ஒன்றினையும் ரூபா 13 இணையும் கொடுத்தான். அவனுக்குக் கிடைக்க வேண்டிய மீதிப் பணம் எத்தனை ரூபாய்? (.............)

22. சம்பவத்தின் மீதிப் பகுதியை நிறைவு செய்வதற்குப் பொருத்தமான ஆறு வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது நான்கு சொற்களாவது இடம்பெறுதல் வேண்டும் அவ்வாக்கியத்தின் எழுவாய், பயனிலைத் தொடர்பு திருத்தமாக இருத்தல் வேண்டும்.)

வேகமாக வீசிய காற்றினால் கதவு மூடப்பட்டது. புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டிருந்த நான் திகைப்படைந்தேன். புத்தகத்தை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு வீட்டுக்கு வெளியே வந்தேன். காற்றினால் மரங்கள் சுழன்று சுழன்று ஆடுவது என் கண்களுக்குத் தெரிந்தது. இத்துடன் அணில் ஒன்று ஓயாமல் கீச்சிடும் சத்தமும் கேட்டது. நான் அச்சத்தம் வந்த திசையை நோக்கினேன்.

(i) ..........................................................................................................

..........................................................................................................

(ii) ..........................................................................................................

..........................................................................................................

(iii) ..........................................................................................................

..........................................................................................................

(iv) ..........................................................................................................

..........................................................................................................

(v) ..........................................................................................................

..........................................................................................................

(vi) ..........................................................................................................

..........................................................................................................

## வினாத்தாள் I

| | | | | |
|---|---|---|---|---|
| 1. (2) | 2. (1) | 03. (3) | 04. (2) | 05. (2) |
| 06. (1) | 07.(1) | 08. (3) | 09. (2) | 10. (1) |
| 11. (2) | 12. (2) | 13. (1) | 14. (3) | 15. (3) |
| 16. (1) | 17. (2) | 18. (1) | 19. (3) | 20. (1) |
| 21,. (3) | 22. (2) | 23. (3) | 24. (1) | 25. (2) |
| 26. (3) | 27. (3) | 28. (3) | 29. (1) | 30. (3) |
| 31. (3) | 32. (2) | | | |
| 33. 'ல்' கூட்டில் புள்ளடி | | 34. 'ம' உள்ள கூட்டில் புள்ளடி | | 35. பணம் |
| 36. வரம் | 37. 20 | 38. 1 | 39. 202 | 40. 165 |

## வினாத்தாள் II

1. (i) காடுகள்
   (ii) மெலிந்த
   (iii) பிடி
   (iv) திரிகின்றன.
   (v) அங்கும் இங்கும் ஆடி அசைந்தது
   (vi) நாம்
   (vii) மிகவும் ஆறுதலாக சுயாதீனமாக
   (viii) மழைக் காலம் ஆகையால் குழிகளில் நீர் தேங்கி நிற்கும் அதனை அவை குடிக்கும்
   (ix) பரபரப்பு / ஒலி எழுப்புதல்
   (x) வெம்பமை

2. (i) விலங்குகள் குளத்துநீரைக் குடிப்பதற்கு வரும்
   (ii) காலை மலர்ந்த பூக்களால் மாலை தொடுத்தனர்.

3. (ji) கடும் உழைப்பு
   (ii) மிகுந்த கவனமாக வளர்த்தல்

4. (i) Rain
   (ii) Green Colour
   (iii) River
   (iv) Doctor

5. (i) விலங்குகள்
   (ii) விழாக்கள் / பண்டிகைகள் கொண்டாட்டங்கள்
   (iii) முயல்
   (iv) மீள்தகவுள்ள காற்றுப் பை, இலேசான வாயு அடைத்த பை, காற்றிலே மிகுந்து உயரே செல்லும் கனம் குறைந்த பை

6. (i) 4
   (ii) 4
   (iii) 2
   (iv) 3
   (v) 3
   (vi) 2
   (vii) 1
   (viii) 2
   (ix) 2
   (x) 2

7. (i) பொன்னாவரசு
   (ii) கண்டங் கத்தரி
   (iii) ஆமணக்கு

(iv) கற்றாளை

8. 

9. (i) மட்பாண்ட கைத்தொழில்
   (ii) சீமெந்து கட்டட வேலை
   (iii) உலோக / மர வேலை
   (iv) கட்டட வேலை

10. வலப்பக்கம், இடப்பக்கம், வலப்பக்கம்

11. (i) 3
    (ii) 3
    (iii) 3
    (iv) 4

12. (i) எக்காளம்
    (ii) சங்கு

13. (i) குறிப்பிற்குச் செல்
    (ii) இலகுவாய் நில்

14. (i) 201
    (ii) 19
    (iii) 27
    (iv) 630
    (v) 405
    (vi)




15. (i) $18 cm^2$
    (ii) 0.18

16. 26cm

17. 6

18. 3 மணி 30 நிமிடம்

19. 5 நாட்கள்

20. 18

21. ரூபா 50.00

22. 1. இங்கே பாம்பு ஒன்று அணில் இருந்த மரத்தில் ஏறிக்கொண்டிருந்தது.
    2. மரத்தில் இருந்த பறவைகள் அபயக்குரல் எழுப்பியபடி மரத்தை சுற்றி வந்தன
    3. நான் அத்திசையை நோக்கி சிறிது தூரம் நடந்து சென்றேன்
    4. காற்று என்னில் பட்டதும் மிகுந்த குளிர்ச்சியை உணரக்கூடியதாக இருந்தது.
    5. அப்போது ஒரு சில மழைத்துளிக்களும் விழ ஆரம்பித்தன.
    6. மழை வரும் என்று அச்சத்தினால் திரும்பி நான் வீட்டை நோக்கி ஓடினேன்.

## மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2002 ஓகஸ்ட்

### வினாத்தாள் I

45 நிமிடங்கள்

* இவ் வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் இத் தாளிலேயே விடை எழுதுக.

ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று விடைகள் கொடுக்கப் பட்டுள்ளன. சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.



● 1 ஆம் 2 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களுக்கு மிகப் பொருத்தமான உரு யாது?

1. அழகு - மென்மை - சுவை.



(1)



(2)



(3)

2. பாயக்கூடியது - ஓடக்கூடியது - மிதக்கக்கூடியது.



(1)



(2)



(3)

3. பின்வரும் அடைப்புகளில் உள்ள வாக்கியங்களை வாசியுங்கள். நிகழ்ச்சிகள் நடக்கின்ற வரிசைக்கிரமத்தைக் காட்டுகின்ற விடை எது?

1. இரண்டும் ஒன்றாக உணவைத் தேடிக் கொண்டுவந்து குஞ்சுகளுக்கு ஊட்டின.

2. ஆண்குருவி முயற்சி செய்து ஒரு கூட்டைக் கட்டியது.

3. பெண்குருவி முட்டைகளை அடைகாத்தது.

4. பெண்குருவி அங்கு பல முட்டைகளை இட்டது.

5. முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிவந்தன.

6. குஞ்சுகள் நன்றாக வளர்ந்து வந்தன.

(1) 4, 2, 3, 5, 6, 1 (2) 2, 4, 3, 5, 1, 6 (3) 2, 3, 4, 5, 6, 1

04. ஒரு பிள்ளை காலையில் எழுந்து பாடசாலை செல்வதற்குப் புறப்படும் வரை செய்து முடிக்க வேண்டிய கருமங்கள் பல உள்ளன. அவற்றுள் முதலில் செய்ய வேண்டிய கருமமும் இறுதியில் செய்ய வேண்டிய கருமமும் கீழே தரப்பட்டுள்ளன.

இக் கருமங்களின் சரியான வரிசைக் கிரமத்தைக் காட்டுவதற்கு இரண்டாம், மூன்றாம் நான்காம் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான கருமங்களைக் காட்டும் விடை எது?

(A) நித்திரை விட்டெழுதல்
(B) ..............................
(C) ..............................
(D) ..............................
(E) வீட்டிலிருந்து புறப்படுதல்

| (1) | (2) | (3) |
|---|---|---|
| (B) உடை அணிதல் | (B) உணவு உண்ணல் | (B) முகம் கழுவுதல் |
| (C) முகம் கழுவுதல் | (C) முகம் கழுவுதல் | (C) உடை அணிதல் |
| (D) உணவு உண்ணல் | (D) உடை அணிதல் | (D) உணவு உண்ணல் |

எம்மைப் போன்ற சிறுவர்கள்
ஞானம்பண்பு வளரப் பெற்று
உழைத்திடுவார் நாட்டினுக்கு
எங்கும் என்றும் ஆசையாய் கற்றல்
மங்காத சுகவாழ்வின் ஆதாரம்
எதுவுமில்லை எவர்க்கு

05. ஞானம்பண்பு வளரப் பெற்று என்பதன் பொருள் யாது?
(1) அறிவும் நற்பழக்கவழக்கங்களும் மேம்படுதல்.
(2) இல்லாத குணங்களைக் காட்டுதல்.
(3) அறிவை விட நற்பழக்கவழக்கங்கள் மேம்படுதல்.

06. மங்காத சுகவாழ்வின் ஆதாரமாக அமைவது யாது?
(1) சிறுவர்கள் (2) கற்றல் (3) ஞானமும் பண்பும்

07. அமீன் படிப்பதில் எவ்வித ஆர்வமும் காட்டுவதில்லை. அவன் எந்நேரமும் விளையாட்டில் ஈடுபடுவான். தாயும் தந்தையும் பாடங்களைப் படிக்கும்படி எப்போதும் அறிவுரை கூறுவர். அமீன் சிறிதளவும் அவற்றைக் கேட்பதில்லை. அமீனின் பெற்றோர்களுடைய செயலை விவரிக்கும் மிகச்சிறந்த தொடர் பின்வருவனவற்றுள் எது?
(1) அது குருடனுக்கு குருடன் வழிகாட்டியது போன்ற செயலாகும்.
(2) அது செவிடன் காதில் ஊதிய சங்கு போன்ற செயலாகும்.
(3) அது குளிக்கப் போய் சேறு பூசியது போன்ற செயலாகும்.

08. "முயற்கொம்பு தேடி அலைந்தது போல" என்பதற்குப் பொருத்தமான சந்தர்ப்பம் பின்வருவனவற்றுள் எது?
(1) இல்லாத பொருளைத் தேடி அலைதல்
(2) அலைந்து திரிந்து தேடிய பொருளைப் பெறுதல்
(3) வழிதவறி நிற்பவனிடம் வழி கேட்டல்

09. ஒரு காட்டில் ஒருபுலி வசித்து வந்தது. புலி வயோதிபப்பருவம் அடைந்ததனால் தனது இரையைத் தேடுவது அதற்குச் சிரமமாகி விட்டது. ஒரு நாள் பசு ஒன்றின் தோலைப் போர்த்திக் கொண்டு புலி பசுக்கூட்டத்தினுள் நுழைந்தது. தன்னையும் பசு எனக்கூறிக் கொண்டது. பின்னர் பசுக்களை ஒவ்வொன்றாகப் பிடித்துத்தின்ன ஆரம்பித்தது. இதனாலேயே "பசுத்தோல் போர்த்த புலி" என்ற தொடர் வழங்கப்படுகிறது. இத்தொடரின் பொருள் யாது?
(1) உலகில் தீயவர்கள் எல்லோரும் நல்லவர் போல நடிப்பார்கள்.
(2) நல்லவர் போல நடிக்கும் தீயவர்களும் உலகில் உள்ளனர்.
(3) உலகில் நல்லவர்கள் எல்லோரும் தீயவர்கள் போல நடிப்பார்கள்.

10. பசியினால் வாடிய நரி ஒன்று இரை தேடிச் செல்லும் போது திராட்சைக் குலை ஒன்றைக் கண்டு அதனைப் பறித்துத் தின்றது.
மேலுள்ள வாக்கியத்தின் கருத்துப் பிழையானது. வாக்கியத்தின் கருத்துப் பிழையாவதற்குக் காரணமான விடயம் எது?
(1) நரிக்குப் பசி ஏற்படுவதில்லை.
(2) நரி இரைதேடிச் செல்வதில்லை.
(3) நரி திராட்சையை உணவாகக் கொள்வதில்லை.

11. "ஒரு நரி கோபமடைந்து ஆமை ஒன்றை நீரில் தள்ளி விட்டபோது ஆமை நீரில் அமிழ்ந்து இறந்து போனது"
இவ்வாக்கியத்தின் கருத்துப் பிழையானது. வாக்கியத்தின் கருத்துப் பிழையாவதற்குக் காரணமான விடயம் எது?
(1) ஆமைக்கு நரியைச் சந்திக்க வாய்ப்புக் கிடைப்பதில்லை.
(2) நரியைக் கண்டவுடன் ஆமை பயப்படுவதற்குக் காரணம் எதுவுமில்லை.
(3) ஆமை நீரில் அழிந்து இறப்பதற்கு இடமில்லை.

* பின்வரும் பந்தியை வாசித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

இப்போது கேட்பது இரண்டாவது வெடியின் சத்தமாகும். வெடிச் சத்தம் எந்தத் திசையிலிருந்து வந்ததென எனக்கு அறிந்து கொள்ள முடியவில்லை. நான் தந்தையிடமிருந்து, பிரிந்து ஓடிவந்து இங்கு ஒளிந்துள்ளேன். எனது முன்னங்கால் ஒன்று காயம்பட்டு இரத்தம் பாய்கிறது. தந்தைக்கு என்ன நடந்ததென எனக்குத் தெரியாது. தந்தைக்கு வெடிபட்டதா? தந்தை வெடித் தாக்குதலால் இறந்து விட்டாரா? எனக்கு அறிந்து கொள்ள முடியவில்லை. எனது இதயம் படபடக்கிறது. எனது முழு உடம்பும் நடுங்குகிறது. கண்களிலிருந்து கண்ணீர் பெருகுகின்றது. நாங்கள் எப்பொழுதும் பயத்துடனேயே வாழ்கிறோம். காட்டில் உலாவித் திரியும் முறை பற்றியும் பகைவர்களிடமிருந்து தப்பும் முறை பற்றியும் தந்தை எப்போதும் எனக்குச் சொல்லித் தந்துள்ளார். இருந்தும் இன்று தந்தை பகைவரின் வெடிக்கு இரையாகி விட்டார்.

12. இங்கு கூறப்படுவது
(1) அநாதையான பிள்ளையின் சிந்தனை
(2) ஆபத்துக்குள்ளான பிராணியின் சிந்தனை
(3) வேட்டைக்குச் சென்ற பிள்ளையின் சிந்தனை

13. இங்கு தரப்பட்டுள்ள விபரங்களின்படி இந்நிகழ்ச்சி நடைபெற்றது
(1) காலையில் எனக் கூறலாம்.
(2) மாலையில் எனக் கூறலாம்.
(3) நாளின் எந்த நேரத்தில் என்று கூற முடியாது.

14. ஒரு பிள்ளை தனது வீட்டிலிருந்து நண்பனின் வீட்டுக்குப் போகும் பொழுது கடந்து சென்ற இடங்கள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| அஞ்சல் அலுவலகத்தைக் கடந்து பொலிஸ் நிலையத்தைக் கடப்பதற்கு முன்னராகும். |
|---|

| வைத்தியசாலையைக் கடந்து பொலிஸ் நிலையத்தைக் கடந்த பின்னராகும். |
|---|

| அஞ்சல் அலுவலகத்தைக் கடப்பதற்கு முன்னர் மகாவித்தியாலயத்தைக் கடந்தது. |
|---|

இதற்கேற்பப் பிள்ளையின் வீட்டிலிருந்த மிகக் கூடிய தூரத்திலுள்ள இடத்தையும் மிகக் குறைந்த தூரத்திலுள்ள இடத்தையும் முறையே காட்டும் விடை யாது?

(1) வைத்தியசாலை - மகாவித்தியாலயம்
(2) அஞ்சல் அலுவலகம் - வைத்தியசாலை
(3) பொலிஸ் நிலையம் - மகாவித்தியாலயம்

15. விமலா காலையில் பாடசாலைக்குச் செல்லும் போது அவளது நிழல் அவளது வலக் கைப் பக்கத்தில் விழுவதைக் காணக் கூடியதாக இருந்தது. அவ்வாறெனில் அவள் எத்திசையை நோக்கிச் சென்றாள்?

(1) வடக்கு (2) மேற்கு (3) தெற்கு

16. குமார் தனது 10 வது பிறந்தநாளை இற்றைக்கு இரு ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டாடினான். அன்று லலிதாவின் வயது 4 ஆண்டுகளாக இருந்தது. இதற்கேற்பக் குமாரினதும் லலிதாவினதும் வயதுகள் தொடர்பான சரியான கூற்று யாது?

(1) இன்று குமாரின் வயது லலிதாவின் வயதின் இருமடங்காகும்?
(2) இன்று குமார் லலிதாவிலும் இரு ஆண்டுகளினால் மூத்தவன்
(3) இன்னும் 5 ஆண்டுகளில் லலிதாவின் வயது 10 ஆண்டுகளாகும்.

* பின்வரும் A, B, C, D என்ற அடைப்புகளுள் சில பழங்களும் சில காய்கறிகளும் சில இனிப்புப் பணியாரங்களும் சில பான வகைகளும் காணப்படுகின்றன. இதற்கேற்ப 17ஆம் 18ஆம் வினாக்களுக்கு விடை தருக.

A
- கத்தரிக்காய்
  - விசுக்கோத்து
- மாம்பழம்
  - பப்பாசி
- நீர்

B
- பாகற்காய்
  - போஞ்சி
- கேக்
  - தோடம்பழம்
- கோப்பி

C
- அப்பிள்
  - கொக்கிஸ்
- கரட்
  - முள்ளங்கி
- அதிரசம்

D
- கோவா
  - விளாம்பழம்
- பால்
  - அன்னாசி
- விக்ஸ்

17. இந்த அடைப்புகளிடையே இரண்டு காயகறிகள் வீதம் உள்ள முன்று அடைப்புக்களும் எவை?

(1) A, B, C (2) B, C, D (3) A, B, D

18. இந்த அடைப்புகளிடையே இரண்டு பழங்கள் வீதம் உள்ள இரண்டு அடைப்புகளும் எவை?

(1) Aஉம் Dஉம் (2) Bஉம் Cஉம் (3) Cஉம் Dஉம்

19. பொழுதினை ஒழுங்கு முறைப்படி காட்டும் விடை யாது?

(1) இரவு - பகல் - காலை - மாலை
(2) காலை - பகல் - மாலை - இரவு
(3) பகல் - மாலை - காலை - இரவு

20. பருமனில் ஒழுங்குமுறைப்படி பிரதேசங்களைக் காட்டும் விடை எது?

(1) நாடு - மாகாணம் - உலகம் - கிராமம்
(2) கிராமம் - உலகம் - மாகாணம் - நாடு
(3) கிராமம் - மாகாணம் - நாடு - உலகம்

21. பெறுமதியின் ஒழுங்குமுறைப்படி பொருட்களைக் காட்டும் விடை எது?
(1) தங்கம் - வெள்ளி - இரும்பு - செம்பு
(2) வெள்ளி - செம்பு - தங்கம் - இரும்பு
(3) தங்கம் வெள்ளி - செம்பு - இரும்பு

22. இக்கோலத்தைப் பாருங்கள்



இக் கோலத்திற்கேற்ப வெற்று அடைப்புக்குப் பொருத்தமான உரு யாது?



உரு 1 உரு 2 உரு 3

23. இக்கோலத்தைப் பாருங்கள் 345 → 453 → 534 → [ ]
இக்கோலத்திற்கேற்ப வெற்று அடைப்புக்குப் பொருத்தமான எண்யாது?
(1) 345 (2) 435 (3) 344

24. பின்வரும் கோலத்தைப் பாருங்கள்.



இக் கோலத்திற்கேற்ப அடைப்புக்குப் பொருத்தமான உருயாது?



(1) (2) (3)

25. பின்வரும் கோலத்தைப் பாருங்கள்.



இக்கோலத்திற்கேற்ப வெற்று அடைப்புக்குப் பொருத்தமான உரு யாது?



(1) (2) (3)

* 26ஆம் 27ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள எண் பிரசினங்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்கள் யாவை?

26.
```
4   5   7
3 ..... 4
---------
1 ..... 3
=========
```
(1) 2, 3 (2) 1, 3 (3) 1, 6

27.
```
8   4   6
1 ..... 2
---------
9 ..... 8
=========
```
(1) 5, 9 (2) 4, 6 (3) 3, 1

* பின்வரும் வரிப்படத்தில் உள்ள வட்டமானது தொலைக்காட்சியைப் பார்க்க விரும்பும் பிள்ளைகளைக் காட்டுகிறது. சதுரமானது செல்லப் பிராணிகளை வளர்க்க விரும்பும் பிள்ளைகளைக் காட்டுகிறது. முக்கோணியானது விளையாட விரும்பும் பிள்ளைகளைக் காட்டுகிறது. இத்தகவல்களுக்கேற்ப 28ஆம் 29ஆம் வினாக்களுக்கு விடை தருக.




28. தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கும், விளையாடுவதற்கும் செல்லப்பிராணிகளை வளர்ப்பதற்கும் விருப்பமுடைய பிள்ளை யார்?
(1) சரத் (2) ராஜா (3) கமலா

29. விளையாடுவதற்கும் செல்லப்பிராணிகளை வளர்ப்பதற்கும் விருப்பமுடையவரும் தொலைக் காட்சியைப் பார்க்க விருப்பம் இல்லாதவருமான பிள்ளை யார்?
(1) ராஜா (2) கீதா (3) லலிதா

* கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களினதும் எழுத்துக்களினதும் நிரையைக் கொண்டு 30 ஆம் 31 ஆம் 32 ஆம் வினாக்களுக்கு உரிய விடையைத் தெரிவு செய்க.

5 5 K 6 6 J K K 5 S J 5 B J 8 J R R 6 5 K R K 6 J J 6 S S 6 J J

30. இலக்கமும் எழுத்துக்களும் உள்ள இந்நிலையில் எத்தனை J எழுத்துக்கள் உள்ளன?
(1) 10 (2) 9 (3) 8

31. இங்கு மிகக் குறைவாகக் காணப்படுவது எது?
(1) இலக்கம் 8 (2) எழுத்து K (3) இலக்கம் 6

32. இங்கு ஒரு இலக்கத்திற்கு முன்னும் பின்னும் ஒரேவகை எழுத்துக் காணப்படுகிறது. அந்த எழுத்து யாது?
(1) எழுத்து J (2) எழுத்து K (3) எழுத்து R

இங்குள்ள படங்களை அவதானித்து 33 ஆம் 34 ஆம் வினாக்களுக்கு உரிய விடையைத் தெரிவு செய்க.



33. இப்படங்களில் தாவர வர்க்கத்துக்குரிய படங்கள் மட்டும் அடங்கிய விடையாது?
(1) A, B, D, F (2) A, C, D, H (3) A, D, G, H

34. இப்படங்களில் மனிதரின் ஆக்கங்களைக் கருதத்தக்க பொருட்கள் மட்டும் அடங்கிய விடை யாது?
(1) B, E, F, I (2) B, E, G, I (3) A, C, E, H

35. இப்படத்தில் உள்ள தராசின் இரு பக்கத்தட்டுக்களிலும் உள்ள பொருட்களின் நிறைகள் சமனாகும்.



இதற்கேற்ப கீழே தரப்பட்டுள்ள தராசின் இருபக்கத் தட்டுகளிலும் உள்ள பொருட்களின் நிறைகள் சமனாவதற்கு -?- குறியீட்டினால் காட்டப்பட்டுள்ள வெற்றுத் தட்டில் இடப்பட வேண்டிய பொருட்கள் அடங்கிய விடை யாது?






(1)  (2)  (3) 

36. 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 என்ற இலக்கங்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளது. கீழே தரப்பட்டுள்ள மஹரகம என்ற சொல் எழுதப்பட்டுள்ள முறை யாது?
(1) 4, 2, 6, 1, 4 (2) 4, 2, 3, 2, 1 (3) 6, 3, 4, 2, 3

37. வந்தன என்ற சொல் இரகசியக் குறியீட்டைப் பயன்படுத்தி கீழே தரப்பட்டுள்ள முறையில் எழுதப்பட்டுள்ளது.

+ X Y 

இதற்கேற்ப தந்தன என்னும் சொல் எழுதப்படத்தக்க முறையைக் காட்டும் விடை யாது?
(1) X +  (2)  (3) Y X Y 

38. இங்கு தரப்பட்டுள்ள அடைப்புகளினுள்ளே இருக்கும் உருக்களுக்கு யாதாயினும் ஒரு பெறுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த உருக்களின் பெறுமதிகளின் மொத்தம் குறுக்காகவும் கீழ் நோக்கியும் தரப்பட்டுள்ளது. பெறுமதிகளின் மொத்தம் தரப்படாத -?- என்ற குறியீட்டினால் காட்டப்படும் நிரலின் மொத்தம் யாது?




(1) 8 (2) 9 (3) 10

39. இங்கு தரப்பட்டுள்ள அடைப்புகளினுள்ளே இருக்கும் உருக்களுக்கு யாதாயினும் ஒரு பெறுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த உருக்களின் பெறுமதிகளின் மொத்தம் குறுக்காகவும் கீழ்நோக்கியும் தரப்பட்டுள்ளது. உரு தரப்படாத -?- என்ற குறியீட்டினால் காட்டப்படும் அடைப்பினுள்ளே இடப்பட வேண்டிய உரு யாது?







40. இங்கு தரப்பட்டுள்ள அடைப்புகளினுள்ளே இருக்கும் உருக்களுக்கு யாதாயினும் ஒரு பெறுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த உருக்களின் பெறுமதிகளின் மொத்தம் குறுக்காகவும் கீழ்நோக்கியும் தரப்பட்டுள்ளது. உரு தரப்படாத -?- என்ற குறியீட்டினால் காட்டப்படும் இரு அடைப்பினுள்ளேயும் இடப்பட வேண்டிய ஒரு உருக்களும் அடங்கிய விடை யாது?






# மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2002 ஓகஸ்ட்

1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

## வினாத்தாள் II



இவ் வினாத்தாளில் 77 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் இத் தாளிலேயே விடை எழுதுக.

* கீழே தரப்பட்டுள்ள விவரத்தை வாசித்து இல. 1 முதல் 17 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

"டெங்குப் பீதி வீட்டுக்கு வீடு பரவுகிறது. இம்முறை டெங்கு கொழும்புப் பிரதேசத்திலேயே அதிக அளவில் பரவியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நுளம்புகளை விரட்டுவதற்கும் அழித்து ஒழிப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பெற்றோர் தமது பிள்ளைகளின் பாதுகாப்புக்காகவும் நலனுக்காகவும் பல்வேறு பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்துகின்றனர். மாரிகாலத்துடன் டெங்கு நுளம்புகள் தொழிற்படத் தொடங்குகின்றன. டெங்கு ஒழிப்புக்காக விசேட செயலணியும் அமைக்கப்பட்டுள்ளது.

காய்ச்சலுடன் தோலில் சிவப்புப் புள்ளிகள் ஏற்படுதல் டெங்கின் அறிகுறியாகும்.

கியூபாவில் அடிக்கடி வீடுகளைப் பரீட்சித்து அறிக்கைப்படுத்துவதற்குக் குழுவொன்றினை அமைத்ததின் மூலம் டெங்கு நோய் கட்டுப்படுத்தப்பட்டது. சிங்கப்பூரில் குப்பைகூளங்களைக் குவிப்பவர்களுக்கு அபராதம் விதித்தல் மூலம் டெங்கு கட்டுப்படுத்தப்பட்டது."

1. இங்கு "வீட்டுக்கு வீடு" என்பதனால் கருதப்படுவது யாது? (..............................)
2. இங்கு குறிப்பிடப்பட்டுள்ளபடி டெங்கு பரவுவதற்கு உதவும் இயற்கை இயல்பு ஒன்றை எழுதுக. (..............................)

* கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு பொருத்தமான ஒத்த சொற்களை எழுதுக.

3. பீதி (..............................) 4. காலம் (..............................)

* கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான எதிர்கருத்துச் சொற்களை எழுதுக.

5. மாரி (..............................) 6. அழித்தல் (..............................)

* மேலுள்ள விவாதத்திற்கேற்பக் கீழே தரப்பட்டுள்ள சொற்களால் கருதப்படுவன யாவை?

7. நலன் (..............................) 8. செயலணி (..............................)

9. மேலுள்ள விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உயர் திணைப் படர்க்கைப் பன்மை எழுவாயை எழுதுக. (..............................)

10. இவ்விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படர்க்கை ஒருமை வினைமுற்று ஒன்றை எழுதுக. (..............................)

11. இங்கு கூறப்பட்டுள்ள பெயர் அடைமொழிச் சொல் ஒன்றை எழுதுக. (..............................)

12. டெங்கு ஒழிப்புக்காக எடுக்கப்படக்கூடியதென மேலுள்ள விவரத்தில் குறிப்பிடப்படும் முறைகள் இரண்டினை எழுதுக.

(______________________________)

(______________________________)

13. மேலுள்ள அறிக்கையில் மூன்று நாடுகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அவற்றின் பெயர்களை எழுதுக.

(..............................) (..............................) (..............................)

* கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்தில்) எழுதுக.

14. பெற்றோர் (..............................) 15. சிவப்பு (..............................)

16. காய்ச்சல் (..............................) 17. பிள்ளைகள் (..............................)

* கீழே தரப்பட்டுள்ள கடிதத்தினை வாசித்து இல. 18 முதல் 22 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பூங்கா ஒழுங்கை,
திருநகர்.

அன்புள்ள டினேஸ்,

அண்மையில் ஒரு நாள் நான் பொதுநூலகத்தில் புத்தமொன்றைக் கண்ணுங் கருத்துமாக வாசித்துக் கொண்டிருந்த போது, நிர்மலன் அங்கு வந்தான். என்ன ஆச்சரியம்! அவன் என்னோடு கதைத்தான். விளையாடுவதற்கு நல்ல மைதானம் ஒன்று அங்கிருப்பதாகக் கூறினான். வருகின்ற ஞாயிற்றுக்கிழமை நிர்மலின் வீட்டுக்கு நான் போகின்றேன். உனக்குத் தெரிந்த எனது சித்தப்பாவின் மகனான வாகீசனும் அங்கு வருவதாகக் கூறினான். நீயும் அங்கு போவதற்கு வா.

இப்படிக்கு,
அன்புள்ள,
மோகன்.

18. கடிதம் எழுதும் போது இடம்பெற வேண்டிய முக்கிய அம்சமொன்று இக்கடிதத்தில் காணப்படவில்லை அது யாது என எழுதுக. (..............................)

19. வியப்பை வெளிப்படுத்த இடப்படும் நிறுத்தக்குறி யாது? (..............................)

20. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இணைமொழித் தொடரை எழுதுக. (..............................)

21. இக்கடிதத்தில் "அங்கு" என்பதனால் கருதப்படுவது யாது? (..............................)

22. இங்குள்ள விவரங்களின்படி வாகீசனுக்கும் மோகனுக்கும் இடையில் உள்ள உறவு முறை யாது? (..............................)

* கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லின் கருத்தையும் தமிழில் எழுதுக.

23. House (..............................) 24. Play (..............................)

